# தூய கன்னி மரியாவின் அமலோற்பவம் பெருவிழா - டிசம்பர் 08

## திருப்பலி முன்னுரை

அன்னையின் விழா நல்வாழ்த்துக்கள்!

தன் அன்னையை கருவிலேயே குற்றமற்றவராக உதிக்கச் செய்தார்.

அமலஉற்பவியாக உருவெடுத்த அன்னை கன்னிமரியை போற்றுதற் சிறந்தது. தன்னை சுமக்கும் தகுதியை தந்த இறைவன் அவர்களை முன்கூறித்து குற்றமற்ற நிலையில் அவதானிக்கச் செய்தார் இறைவன் என்கின்ற மறையுண்மையைதிருஅவை கோட்பாடாக அறறிவித்தது 1854ம் ஆண்டு. திருத்தந்தை 9ம் பத்திநாதர் காலத்தில் இதனை அறிவித்தார்கள்.

தூதரை அனுப்பி, 'அருள்மிகப் பெற்றவரே' என்று அறிவிக்கச் செய்தார். தான் தேர்வு செய்தவர்களை அவர் எந்த நிலையிலும் வாழச் செய்வார் எனட்பதுவே நாம் அறிய வேண்டிய உண்மை.

நம்மையும் அருள்மிகுந்தவராக மாற்றிடவே, அவர் மண்ணிலே மனிதரானார். அன்னையைப் போல நாம் நம்மை அர்ப்பணிப்போமானால், அவரால் அது கூடும்.

அர்ப்பணிப்போம், ஆசீர் பெறுவோம்.

### மன்றாட்டுக்கள்:

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. திருஅவையை ஆசீர்வதியும். அதனை சீர்திருத்த எமது திருத்தந்தை எடுத்து வரும் முன் முயற்சிகளில், உம் ஆவியை துணையாக தந்து உறுதிப்படுத்த அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. எமது நாட்டையும், ஆளுவோரையும் ஆசீர்வதியும். நாட்டை நேரிய வழியிலே இட்டுச் செல்ல அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அமல அன்னையின் பாதுகாவலிலே வாழ்வோரை ஆசீர்வதியும். அன்னையின் அற்புத பண்புகளை தமதாக்கிக் கொள்ள அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. அன்னையின் மக்கள் நாங்கள், எங்களது குற்றத்தை குறைத்து, புண்ணிய வழியிலே நடந்தேற அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. அன்னையின் நாமத்தில் உள்ளோரையும், துறவு அன்பர்களையும், நிறுவனங்களையும் ஆசீர்வதித்து வழிநடத்த அருள்தர இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; +91 843 802 1938; www.arulvakku.com